Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

ஏடு 7 EELA NADU இதழ் 104

National Tamil Daily தேசிய தினசரி

(26-5-65)

விசுவாவசு வைகாசி 13 முஹர்ரம் பிறை 24 புதன்கிழமை

## வெள்ளத்தால் ஏற்பட்ட உணவுச் செலவு ஒன்றேகால் லட்சம்!

கொழும்பு, செவ்.

சில தினங்களுக்கு முன் கொழும்பில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பெருந்தொகையான மக்கள் கஷ்டப்பட்டதுடன் தாழ்ந்த பகுதிகளில் வாழ்ந்தவர்கள் தங்கள் வீடுவாசல்களை இழந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர். இந்த மக்களுக்கு உணவு அளிப்பதற்கு மட்டும் கொழும்பு மாநகரசபை ஒரு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் ரூபாய் செலவிடவேண்டியேற்பட்டதாம்!

**என். எம். மின் வைத்திய செலவு**

டாக்டர் என். எம். பெரேரா நிதிமந்திரியாக இருந்த பொழுது லண்டனில் ஒரு ஆஸ்பத்திரியில் அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டதல்லவா? லண்டன் ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சைச் செலவும் இதர செலவுகளும் லண்டனிலுள்ள இலங்கை ஹைகமிஷன் தான் கொடுத்ததாம். இச்செலவுத் தொகையை லண்டன் ஹைகமிஷனிடமிருந்து மேலதிகச் செலவினமாக திறைசேரி வசூலிக்கக்கூடுமென வதந்திபரவியதைத் தொடர்ந்து டாக்டர் என். எம். பெரேரா நேற்று விடுத்த ஒரு அறிக்கையில் "அந்தச் செலவு தொகையை அதற்கான கணக்கு விபரம் கிடைத்ததும் தாம் செலுத்த உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# தமிழ்ப்பகுதிகளில் சிங்கள போதனை

## தமிழ் எம். பி. க்களுடன் மந்திரி ஆலோசனை

கொழும்பு, செவ்வாய்

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் சிங்களம் படிப்பிப்பது பற்றி ஆலோசனை செய்வதற்கு வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு மகாநாட்டை கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை விரைவில் கூட்டவிருக்கிறார்.

இந்த மகாநாட்டில் தவறாது கலந்துகொள்ளுமாறு இரண்டு மாகாணங்களையும் சேர்ந்த எம். பி.க்களுக்கு அனுப்பி வைத்துள்ள அழைப்பில் திரு. இரியகொல்லை கேட்டிருப்பதாக அறியப்படுகிறது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் சிங்களம் படிப்பிக்கப்படுமென்றும் அங்கு இரண்டாயிரம் சிங்கள ஆசிரியர்களை அனுப்பத் தீர்மானித்துவிட்டதாகவும் முன்னாள் கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல முன்னை அடிக்கடிக் கூறினர். சிங்களம் படிப்பிப்பது பற்றியோ சிங்கள ஆசிரியர்களை நியமிப்பது பற்றியோ திரு. கலுகல்ல தமிழ்ப்பகுதி எம். பி.க்களுடன் ஆலோசனை செய்யவுமில்லை. அவர்களது அபிப்பிராயத்தை அறிய முன் வரவுமில்லை.

1956-ம் ஆண்டு ஜூன் மாதம் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் சிங்களமும் ஒரு பாடமாக இருந்து வந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவப் பேரவையின் சார்பில் கம்பன் விழா மாலை 3-00 மணிக்கு நடைபெறும். பண்டிதர் அ. ஆறுமுகம் 'கம்பன் கவிச்சுவை' பற்றிப் பேசுவார்.

∴ ∴ ∴

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் மாலை 6-30 மணிக்கு திரு. மு. சிவானந்தம் 'இலக்கியத்தில் மறுமலர்ச்சி' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

## யாழ்ப்பாணத்துக்கு 10 படம்வரைஞர்

வெள்ளவத்தை, செவ்.

அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் பதினொரு படம்வரைஞர் நிலஅளவை இலாகாவில் நியமிக்கப்படுவார்கள் இவர்களுக்குரிய நியமனப்பத்திரங்கள் கொடுக்கப்பட்டுவிட்டன.

நிலஅளவை இலாகாவிலிருந்து பத்துப் படம்வரைஞர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் தெரிகிறது இத்திட்டம் நிலஅளவை இலாகாவை எல்லா மாகாணங்களிலும் விஸ்தரிக்கும் திட்டத்தின் முதற்படியாகும்.

## வெலிக்கடைச் சிறையிலிருந்து 3 கைதிகள் தப்பிச்சென்றனர்

கொழும்பு, செவ்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நீண்டகால சிறைத்தண்டனை அனுபவித்துவந்த மூன்று கைதிகள் நேற்று சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

மருதானை கோபன் வீதியைச் சேர்ந்த வினி அப்புஹாமி, மருதானையைச் சேர்ந்த சிரிபாலா, மீகொடையைச் சேர்ந்த சிறிசேன ஆகியோரே தப்பிச்சென்ற கைதிகளாகும்.

தப்பிய கைதிகளின் அங்க அடையாளங்கள் நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டு அவர்களைத் தேடிக்கண்டுபிடிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இதேசமயம் இக்கைதிகள் எப்படித் தப்பிச் சென்றார்கள் என்பதுபற்றி விசாரணை நடைபெறுகிறது.

## தென்னாபிரிக்காவின் ரூ. 125 கோடி ஆயுத கோரிக்கை

### அமெரிக்கா நிராகரிப்பு

வாஷிங்டன், மே 25

25 கோடி டாலர் பெறுமான சுமார் ரூ 125 கோடி ஆயுதங்களை சப்ளை செய்யுமாறு தென்னாபிரிக்கா விடுத்த வேண்டுகோளை அமெரிக்கா நிராகரித்துவிட்டது. இந்த ஆயுதங்களை அமெரிக்காவிலிருந்து பெறுமுகமாக தென்னாபிரிக்கா ராஜிய வழிகள் மூலம் மட்டுமின்றி வர்த்தக வழி மூலமும் முயற்சித்தது.

எனினும் அமெரிக்கா, இந்த ஆயுதங்களை உள்நாட்டில் பாவிக்கப்படும் என்று கருதுவதாலும் தென்னாபிரிக்காவின் இனவேற்றுமைக் கொள்கையை அது எதிர்ப்பதாலும் ஆயுதக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க முடிவு பல இடங்களில் வரவேற்கப்பட்டிருக்கிறது.

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்கள் அனுப்பக் கூடாது என்ற ஐ. நா. தீர்மானத்தை அடுத்து ஆயுதங்கள் சப்ளை செய்வதில்லை என அமெரிக்கா தீர்மானித்ததாக அறிவிக்கப்பட்டது.

## உலக குத்துச்சண்டை சாம்பியன் லிஸ்டனா, கிளேயா?

லூயிஸ்டன், மே 25

கோடிக்கணக்கான ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வரும் உலக அதிபாரக் குத்துச்சண்டை சாம்பியன் போட்டி இன்று காலை இலங்கை நேரம் 8மணிக்கு நடைபெறும். 23 வயதான தற்போதைய சாம்பியன் காஸியஸ் கிளேயும், 31 வயதான முன்னைள் சாம்பியன் சொனிலிஸ்டனும் மாபெரும் இந்தச்சமரில் ஈடுபடுகிறார்கள்.

15 மாதங்களுக்கு முன சென்ற பெப்ரவரியில் பராக்கிரமம் வாய்ந்த குத்துக்காரரான லிஸ்டனை கிளே தோற்கடித்து உலக சாம்பியனானார்.

இன்றைய சண்டை அமெரிக்கா முழுதும் காட்டப்படுவதுடன், அட்லாண்டிச் சமுத்திரத்துக்கு மேலே வானவெளிக்கிரகம் மூலம் பிரிட்டனிலும், இதர 18 நாடுகளிலும் டெலிவிஷனில் காட்டப்படும். உலக விளையாட்டுத்துறை

யில் முடிசூடாமன்னன் என உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் கருதப்படுகிறார். ஒரு சண்டையில் ஒரு சாம்பியனுக்கு லட்சக்கணக்கான டாலர்கள் கிடைக்கும் இது சிலவேளை 1 நிமிஷத்தில் கிடைக்கும். ஆகக் கூடினால் 45 நிமிஷத்தில் கிடைக்கும்.

யார் சாம்பியன்? கிளேயா லிஸ்டனா என்பது இன்று உலகுக்குத் தெரிந்துவிடும்.

## புதிய மின்சாரவசதிகள்

கொழும்பு, செவ்வாய்

மின்சாரப் பகுதியின் உள்நாட்டு மின்சார விஸ்தரிப்புத் திட்டத்தின்படி, நாற்பது பல்வேறு பட்ட கிராமங்களுக்கு மின்சார வசதிகள் செய்வதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இந்த மின்சார விஸ்தரிப்புத் திட்டம் இவ்வாண்டின் இறுதிக்குள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### சூறாவளியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு

## யாழ். மாவட்டத்தில் மட்டும் நிவாரண உதவி இல்லை

### உதவி கோரியும் பணம் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சூறாவளியினால் பாதிக்கப்பட்டு தங்கள் வள்ளங்களையும் வலைகளையும் இழந்த மீனவர்களுக்கு இதுவரை எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை. இதனால் நூற்றுக்கணக்கான மீனவ குடும்பங்கள் தங்கள் நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாமலும், தங்கள் தொழிலை செய்ய முடியாமலும் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்க்கை நடத்தி வருகின்றார்கள்.

திருக்கோணமலை, மன்னார் பகுதிகளில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஏற்கனவே சமூகசேவைப் பகுதியினரால் நிவாரண உதவி வழங்கப்பட்டுவிட்டதென்றும் ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமே நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

இவ்விஷயம் பற்றி யாழ்ப்பாணம் மாவட்ட சமூகசேவை உதவி அதிகாரி திரு. என். சிவசிதம்பரம் நமது நிருபரிடம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சூறாவளியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி அளிக்க சுமார் ஒரு லட்சம் ரூபா சமூகசேவை அதிகாரிகளிடம் விண்ணப்பித்ததாகவும், ஆனால் இதுவரை இப்பணம் கிடைக்கவில்லையென்றும் பணம் கிடைத்த மூன்று தினத்திற்குள் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணமளிக்க முடியுமென்றும் கூறினர்.

கூடிய சீக்கிரத்தில் இப்பணத்தை அனுப்பிவைக்கும்படி நேற்றுக் காலை சமூகசேவை அதிகாரிக்கு தந்தி அனுப்பியுள்ளதாகவும் திரு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களில் எவரும் தங்கள் மீன்பிடி வலை காணாமல் போனது பற்றி தெரிவிக்கவில்லையென்றும், கடற்கரையோரங்களில் பல வலைகள் கண்டெடுக்கப்பட்டதாகவும் அவ்வலைகள் மீனவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

கிளிநொச்சி, துணுக்காய், பூநகரி பளை, காரியாதிகாரி பகுதிகளில் சூறாவளியினாலும் வரட்சியினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்கனவே நிவாரணவேலைகள் ஆரம்பித்துவிட்டன. மற்றும் பகுதிகளிலும் விரைவில் நிவாரண வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப்குணவர்த்தன அடுத்த மாதம் 6-ந் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருப்பதால் அத்திகதிக்குமுன் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணஉதவி அளிக்கப்படுமென அறியப்படுகிறது.

## வீதியைத் திருத்த கோரிக்கை

புங்குடுதீவு, செவ்

புங்குடுதீவு 6-ம் வட்டாரத்திலுள்ள அம்பலவாணர் வீதி கடந்த பல வருடங்களாகச் சீர்திருத்தப்படாததால் இப்பகுதிமக்கள் பெரும் கஷ்டமுறுகின்றனர். தினசரி மக்கள் போக்குவரத்திற்கு ஒவ்வாத முறையில் இருக்கும் இவ்வீதியை உடனடியாகத் திருத்தியமைக்குமாறு புங்குடுதீவு கிராம சபையினரை இப்பகுதிமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இது சம்பந்தமாக இப்பகுதி மக்கள் வட்டார உறுப்பினருக்கும், கிராமசபை தலைவருக்கும் மகஜர்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உடலுக்கு உணவு அளியாமலே காம் சிறிது காலம் வேலை செய்வது சாத்தியம். ஆனால் ஆத்மாவின் உணவான பிரார்த்தனையின் விஷயத்தில் அசட்டை செய்தல் தகாது.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna.
Telegrams 'EELA NADU' Jaffna.
Phone: 689.

விசுவாவசு ஆண்டு வைகாசி 13 உ. (26-5-65)


## ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவுகள்

சென்றமாதம் டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றியவர்களில் மிகப்பெருந்தொகையானோர் சித்தியடையவில்லை. இதற்குக் கல்லூரி அதிபர்கள் சிலர் சில காரணங்கள் கூறுகின்றனர். அவர்கள் கூறும் காரணங்கள் சரியானவையும் இருக்கலாம். தவறுகளும் இருக்கலாம். எனினும் பெருந்தொகையான மாணவர்கள் இப்பரீட்சையில் தோல்வியடைந்ததற்குரிய சரியான காரணங்களை ஆராய வேண்டியது அவசியம்.

பாடசாலைகளில் மாணவர்களை சுயமாகவே வகுப்பேற்றி விடுவதும் மாணவர்களின் ஆற்றலைப்பற்றிக் கவலைப்படாமல் அவர்களுக்கு விஞ்ஞானக் கல்வி அளிக்க வேண்டுமென்ற பெற்றோரின் மனப்பான்மையுமே இப்பரீட்சையில் பெருந்தொகையானோர் சித்திபெறத் தவறியதற்குக் காரணமென்று கல்லூரி அதிபர் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதில் உண்மையிருக்கலாம். கல்விப்பயிற்சி காலத்தில்பயில வேண்டிய பாடங்களை மாணவரும், பயிற்ற வேண்டிய பாடங்களை ஆசிரியர்களும் நிறைவேற்றினால் பரீட்சையில் பெருந்தொகையான மாணவர் சித்தியடைந்து மிகக் குறைவானவர்களே தோல்வியடையவும் முடியும். இதனைத்தான் சில நாடுகளில் சுயமாக வகுப்பேற்றிவிடும் முறையும் கல்விப் பயிற்சிக்காலம் முடிந்ததும் பூரணபயிற்சி பெற்றதற்கான தராதரப்பத்திரம் வழங்கும் முறையும் இருப்பதற்குக் காரணம்.

விவேகமான, ஆர்வமற்ற மாணவர்களைத் தவிர இதர மாணவர்கள் பரீட்சையில் தோல்வியடைவதற்குக் காரணம் இல்லை. சென்றவருடம் நடைபெற்று சில தினங்களுக்குமுன் முடிவுகள் வெளிவந்த ஜி. ஸி. ஈ (சாதாரணம்) பரீட்சையில் பெருந்தொகையான மாணவர்கள் சித்தியடையத் தவறியதற்கான காரணங்களை கல்வி அமைச்சு ஆராயுமென நம்புகிறோம். பாடசாலைப் பரீட்சைகளிலும் இறுதிப் பரீட்சைகளிலும் பெருந்தொகையான மாணவர்கள் சித்திபெறத் தவறுவதைக் கட்டுப்படுத்தாதவரை தேசியக்கல்வித்திட்டம் வெற்றியளிக்க முடியாது. இது பற்றி கல்வி அறிஞர்களையும் [illegible]புணர்ச்சியும் கொண்ட தகுதிவாய்ந்த ஒருசபை ஆராய வேண்டியது அவசியம்.

வகுப்புகளில் அளவுக்கதிகமான பிள்ளைகளிருப்பதும், சிரத்தையுடன் கல்விபோதனையளிப்பது குறைவாக இருப்பதும், கல்விபோதனைக்கான சாதனங்கள், உபகரணங்கள் இல்லாமலிருப்பதும், பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் தகுதிபெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறையும் மாணவர், ஆசிரியரின் வரவு ஒழுங்கீனமும் மாணவர்கள் பெருமளவில் பரீட்சையில் தோல்வியடைவதற்கு மற்றும் சில காரணங்கள் என்று கூறலாம். இக்குறைகள் பற்றி ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பாடசாலைகளைப் பொறுப்பேற்றுள்ள கல்வி அமைச்சு மாணவர்கள் பெருமளவில் பரீட்சைகளில் சித்தியடையத் தவறுவதையிட்டுக் கவலை கொள்ளாமலிருக்க முடியாது. தகுதி வாய்ந்த தராதரம் பெற்ற ஆசிரியர்களைக்கொண்டு மாணவர்களுக்கு சிரத்தையுடன் கல்விப்போதனை அளிக்கச் செய்ய வேண்டியதும் அடிக்கடி பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் வித்தியாதரிசிகள் விஜயம் செய்து மேற்பார்வை செய்ய வேண்டியதும் கல்வி ஸ்தாபனங்களில் உள்ள இதர குறைகளை நீக்க முயற்சி செய்ய வேண்டியதும் கல்வி அமைச்சின் கடமையாகும். கல்விக்காக பெருந்தொகையான பணத்தைச் செலவிடும்பொழுது அதன் பெறுபேறுகளைப்பற்றி அக்கறை கொள்ளாதிருக்க முடியாது.

# தமிழும் சமரசமும் தழைக்கவைத்த பெரியார்

[க. பே. முத்தையா (விடிவெள்ளி) நினைவை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.]

— தி. சி. கணேசலிங்கம் —

'விடிவெள்ளி' என்ற புனைபெயரில் எழுத்தாளர்களாலும், 'சமூகத்தொண்டன்' என்று யாழ்ப்பாண பொதுமக்களாலும், 'சமயத்தொண்டன்' என்று யாழ் கிறிஸ்தவ சபையினராலும் அன்பாக அழைக்கப்பட்டுவந்த திரு. கந்தையா பேதுரு முத்தையா அவர்கள் தமது 50 வது வயதில் சென்ற வைகாசிமாதம் 27-ந் திகதி இவ்வுலக வாழ்வை நீத்து அமரரானார்.

இவர் 31-8-1914ல் உடுத்துறையில் பிறந்து தமது கல்வியைத் தெல்லிப்பழை அமெரிக்கன் மிசன் பாடசாலையில் முடித்துக்கொண்டு, 1934ல் ஆசிரியகலாசாலையில் புகுந்து ஆசிரிய பயிற்சியைப் பெற்றார். கல்வியில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் ஊக்கத்தையும் கண்டவர்கள் 1936-ம் ஆண்டு ஆசிரியப்பயிற்சியை முடித்துக்கொண்டு அவர் வெளியேறியவுடனேயே வேம்போடுகேணி இ. க. தமிழ்க் கலவன் பாடசாலைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றும்படி அவரைப் பணித்தனர். இரண்டு ஆண்டுகளின் பின் அவர் பிறந்த ஊராகிய உடுத்துறையில் உள்ள பாடசாலையில் அதே பதவியில் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் பரியோவான் [illegible] ஆரம்ப பாடசாலையில் 7 ஆண்டுகளும் தலைமையாசிரியராகக் கடமையாற்றினார். அதன்பின்னர் 1955ம் ஆண்டு [illegible] சாதனாபாடசாலையில் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று இறக்கும்வரை பாடசாலையைத் திறம்பட நடத்தி வந்தார்.

அவர் ஆசிரியத் தொழிலில் இருந்ததோடல்லாமல் சிறந்த சமயப்பிரசாரகராகவும் பணியாற்றினர். அமெரிக்கன்மிசன் சங்கத்தின் சமயப்பத்திரிகையில் ஆசிரியராகச் சிலகாலம் கடமையாற்றினர். படிப்படியாக முன்னேறிச் சமூகத் தொண்டில் ஈடுபடலானார். இவரது தமிழ்ப் பற்றையும், சமூகசேவை ஆர்வத்தையும் கண்ட 'சமூகஜோதி' முதலியார் தியாகராசா அவர்கள் இவரை யாழ். சனசமூக நிலைய சமாசத்தின் முக்கிய உறுப்பினராக்கி, "சமூகத்தொண்டன்" என்னும் பத்திரிகையை ஆரம்பித்து 'விடிவெள்ளி' அவர்களையே அதன் ஆசிரியராகவும் கடமையாற்றச் செய்தார்கள். சனசமூக நிலையங்களை யொட்டிய செய்திகளை வெளியிடுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட "சமூகத்தொண்டன்" பத்திரிகையை பலதுறையிலும் சேவைசெய்யக்கூடிய சிறந்த பத்திரிகையாக மாதாமாதம் திறம்பட வெளியிட்டார். 1960ம் ஆண்டு பணக்கஷ்டம் காரணமாக "சமூகத்தொண்டன்" பத்திரிகையை நிறுத்திவிடச் சமாசத்தினர் தீர்மானித்தனர். அப்பொழுது அப்பத்திரிகையின் ஞாபகார்த்தமாக பத்தாண்டு மலரொன்றைச் சிறந்த கதைகட்டுரைகளுடன் வெளியிட்டார். அந்தச் சிறந்த முயற்சியையும் மலரின் உயர்ந்த அமைப்பையும் பாராட்டாதவர்கள் இல்லை.

அவருடைய பத்தாண்டுப் பத்திரிகைச் சேவையில் பல இளைஞர்களை எழுத்துலகில் பிரவேசிக்கச் செய்தார்.

க. பே. முத்தையா அவர்களின் சமூகசேவையைப் பாராட்டி 1958-ம் ஆண்டு மேன்மை தங்கிய மகாராணி அவர்கள் ஒரு வெள்ளிப்பதக்கத்தையும், அதே ஆண்டு சமூகசேவைக்காக மகாதேசாதிபதி, பிரதம மந்திரி ஆகியோரால் அளிக்கப்பட்ட இரு தங்கப் பதக்கங்களையும் பெற்றுக்கொண்டார்.

இவர் பலதுறையிலும் சிறப்பாக எழுதும் வன்மை [illegible]திருந்தார். ஒரு சிறந்த கவிஞராகவும், சிறந்த கட்டுரையாசிரியராகவும் விளங்கிய இவருடைய சமயக் கட்டுரை கவிதைகள் "சமூகத்தொண்டன்" "விடிவெள்ளி" என்ற புனைப் பெயர்களில் பல பத்திரிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. "உதயதாரகை" என்னும் கிறிஸ்தவ பத்திரிகையின் ஆசிரியராக ஆரம்பகாலந்தொட்டு சென்ற ஆண்டு வரை கடமையாற்றியுள்ளார்.

தமிழறிவு மிக்க இவர் ஆரம்ப வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்கள் பலவற்றை எழுதியுள்ளார். உயர்தர வகுப்புகளின் உபயோகத்திற்கேற்ற 'தமிழ் அறிவு' என்ற சிறந்த தமிழ் நூலையும் எழுதியுள்ளார். இவ்வாறாகப் பொது சேவையில் சிறந்து விளங்கிய ஆசிரியர் அவர்கள் தமது புனைபெயருக்கேற்ப தமிழ்மக்களிடையே என்று 'விடிவெள்ளி' யாக இருப்பார் என்பது திண்ணம். [illegible] ஆசிரியராக இருந்தமை அவர் தமிழ் இலக்கியத்துக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்கும் செய்யமுடியாத முடிவற்ற சேவைக்கு ஓர் எடுத்துக்காட்டே என்று கூறினும் மிகையாகாது. இறக்கும் தமது சிறந்த சேவையால் இறவாத புகழ் பெற்றுவிட்ட 'விடிவெள்ளி' அவர்களை தமிழ் நெஞ்சம் என்றும் மறவா.

## கிராமத்தொண்டர் படை

குரும்பசிட்டி, செவ்வாய்

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிலுள்ள கிராமங்களில் கிராமத் தொண்டர் படை நிறுவுவதற்காக நேற்றைய தினம் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டென்ட் திரு என். செனரத் தலைமையில் விஷேச கூட்டமொன்று நடைபெற்றது. சுமார் நூறு பேர்களவரை பல்வேறு கிராமங்களில் இருந்தும் வந்திருந்தனர். இவர்களுக்கு பொலிஸ் அதிகாரிகளினால் களவு, கள்ளச்சாராயம் உற்பத்தி, கள்ளக் குடியேற்றம் ஆகியவற்றைத் தடுப்பதில் தொண்டர்கள் பொலிஸாருக்கு எவ்விதம் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென விளக்கம் அளிக்கப்பட்டது.

கிராம தொண்டர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதெனவும் கிராம சேவையாளர்கள் தொண்டர் படையினருக்கு போதிய உதவியளித்தல் வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## பாடசாலையின் பெயர் மாறவேண்டும்

யாழ்ப்பாணம், செவ்

மன்பவுல் உளும் முஸ்லிம் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகசபைக் கூட்டம் தலைமை ஆசிரியர் ஜனாப் எம். எச். எம். அப்துரறஸாக தலைமையில் நடைபெற்றது.

ஜனாப். எம். எச். எம். அப்துர் றஸ்ஸாக் தலைமையுரை நிகழ்த்தியபின் விழா நடத்தும் விஷயமாகச் சபை கலந்துரையாடிப் பல தீர்மானங்களை நிறைவேற்றியது. அதன்பின் பாடசாலையின் இப்போதைய பெயர் மாற்றி வேறோர் நல்ல பெயரை இடவேண்டுமென உதுமானியாக்கல்லூரி அதிபர ஜனாப். எம். எம். யூசுபு பிரேரிக்க ஆசிரியர் ஜனாப். எம். [illegible] அதனை ஆமோதித்[illegible]

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களப் பிள்ளைகளுக்குஅவன் மீது அளவற்றமதிப்பும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு ஆத்திரமும் உண்டாவது சகஜம். இளம் வயதில் உள்ளங்களில் உண்டான அபிப்பிராயம் வயதுவந்தாலும் இருக்குமல்லவா? சிங்கள அரசியல் தலைவர்களில் சிலர் பிரதமமந்திரி டட்லி சேனநாயக்காவை துட்டகெமுனுவுக்கு ஒப்பிடுவது எவ்வளவு தவறான காரியம். தமிழர்களை எதிர்த்து வென்ற துட்டகெமுனுவுடன் டட்லியை ஒப்பிடுவதால் சிங்கள பொதுமக்கள் இவரும் அவ்வாறு செய்வர் என்று எதிர்பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் எழுகிறது. மந்திரி இரியகொல்லையைப் போல் பிரதமரை துட்டகெமுனுவுக்கு ஒப்பிடாமல் தெனிதுவர எம். பி. வில்லியம் சில்வாவைப்போல் பராக்கிரமபாகுவுக்கு ஒப்பிட்டால்வகுப்புவாதம் தலை தூக்காது.

காலஞ்சென்ற பண்டாரநாயக்காவை அடிக்கடி துட்டகெமுனுவின் அவதாரம்என்று போற்றியதால் நிகழ்ந்த விபரீதத்தை அதற்குள்ளாகவா மறந்துவிட்டார்கள்?

— வழிப்போக்கன்

## நாட்டிலும் நகரிலும்

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையும் அரசாங்க ஆஸ்பத்திரியும் எதிரும் புதிருமாக இருக்கின்றன. கா. துறை-கீரிமலைத் தெருதான் அவற்றைப் பிரிக்கிறது. இப்பொழுது சோளகவீசும் காலமாதலால் சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து கிளம்பும் சிமெந்துபுகை ஆஸ்பத்திரி முழுவதையும் ஆக்கிரமித்து தன்பால் அடக்கிக் கொள்ளும். பஸ்பமோ புகையோ என்று சொல்ல முடியாத வகையில் ஆகாயத்தில்மிதந்து வரும் இந்தச் சாம்பல் நிறவஸ்து ஆஸ்பத்திரிக் கட்டடங்களிலும் கட்டில் கதிரைகளிலும் அப்பம்போல் படிந்து நோயாளிகளின் கண், வாய், மூக்குகளை ஊடுருவி அவர்களுடைய உணவுத் தட்டுகளில் போய் அமரும். நோயாளியாலும் டாக்டர்களாலும் இத்தாக்குதலை எதிர்க்க முடியாமல் சரண்புகுந்து கொள்வார்கள். காற்றில்லாத சமயங்களிலும்கூட புகையைக் கக்கும் குழாய் வெகுசமீபத்தில் இருப்பதால் புகைமண்டலம் ஆஸ்பத்திரியைச் சுற்றிவளைத்துக் கொண்டே இருக்கும்.

நோயாளிகளுக்கு அதுவும் ஈசநோயாளிகளுக்கு இதனால் எவ்வளவு கெடுதி என்பதை எவருக்கும் சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. இருந்தும் தொழிற்சாலை அவ்விடத்தை விட்டு அகலமாட்டாது. ஆஸ்பத்திரியும் அங்கிருந்து அசையாது.

வெறும் பனங்காடாய் இருந்த நிலத்தில் யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது ராணுவத்தினர் ஆஸ்பத்திரியைக் கட்டினார்கள். யுத்தம் முடிந்ததும் அரசாங்கம் அதை ஏற்றுக் கொண்டது. கடற்கரையை நோக்கியிருக்கும் 'வார்ட்'டுகள் நோயாளிகளுக்கு மிகவும் சுவாத்தியமானவை. ராணுவத்தினர் கட்டிய கட்டடங்களையும் தளபாடங்களையும் விட்டுப்போக ஆஸ்பத்திரிக்கு மனமில்லை. இதுபோன்ற ஓர் ஆஸ்பத்திரியைக் கட்டிமுடிப்பதென்றால் இக்காலத்தில் ஒரு கோடி ரூபாய்க்குமேல் பிடிக்கும். ஆகையால் ஆஸ்பத்திரியை அகற்றுவது அசாத்தியம்.

சிமெந்து தொழிற்சாலை ஆஸ்பத்திரிக்குப் பிறகுதான் அமைக்கப்பட்டது. ஆயினும் அதையும் அவ்விடத்திலிருந்து அகற்ற முடியாது. ஏனென்றால் கா. துறை புகையிரதநிலையமும் துறைமுகமும் வசதியாக அருகாமையில் இருக்கின்றன. அத்துடன் சிமெந்துஉற்பத்திக்குத் தேவைப்படும் கல்லும்தொழிற்சாலையைச் சுற்றித்தான் இருக்கிறது.

தொழிற்சாலை அமைப்பு ஆரம்பித்த காலத்திலேயே ஆஸ்பத்திரியை வேறொரு இடத்துக்கு கொஞ்சம்கொஞ்சமாக அகற்றியிருக்க முடியும். இதைப்பற்றி எவரும் அந்நேரத்தில் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தின் வடக்குக் கரையோரமாக திருவடிநிலை தொடக்கம் பருத்தித்துறை வரையிலும் கடலோரமாக ஏராளமான வெற்று நிலம் இருக்கிறது. இவ்விடத்தில் எங்கேயாவது பொருத்தமான நிலமாய்ப் பார்த்து ஆஸ்பத்திரியை அகற்ற வேண்டியது அவசியம். இதைப்பற்றி காங்கேசன்துறை எம். பி.யும் மற்றும் தமிழ் எம். பிக்களும் இனிமேலாவது சிந்திக்கவேண்டும்.

⁂ ⁂ ⁂

துட்டகெமுனு என்ற சிங்கள அரசன் நடத்தையில துட்டனாயிருந்தாலும் எல்லாளன் என்ற தமிழரசனைத் தோற்கடித்தபடியினால் அவன் ஒரு மகாவீரன் என்று மதிக்கப்படுகிறான். சரித்திரபாடப் புத்தகத்தில் அவனுடைய வரலாற்றை வாசிக்கும்போது

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவரெஸ்ட் சிகரத்தின் மீது பாரதத்தின் மூன்றாவது வெற்றி

## ரஷ்யா, அமெரிக்கா பாராட்டு

புதுடில்லி, மே 25

**இமயமலையில், உலகத்தின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தைப் பாரத மலையேறும் கோஷ்டி நேற்று 3வது முறையாக வெற்றி பெற்றது. ஓஹ்ரா, அங்காமி என்ற இரு வீரர்கள் நேற்றுக் காலை 10-45க்கு சிகரத்தை அடைந்தனர்.**

மாலையில் அவர்கள் தங்கள் தளத்துக்குத் திரும்பினர். அவர்கள் அமைத்திருந்த இறுதி முகாம் 27930 அடி உயரத்தில் இருந்தது.

இந்த இருவரும் சிகரத்தின் உச்சியில் நின்றதை இதர உறுப்பினர்கள் பைனகுலர் மூலம் கண்டனர். நேற்றுப் பிற்பகல் இறுதியில் வெற்றி பற்றிய உறுதி கிடைத்தது. 31 வயதான ஓஹ்ரா புவியியல் இலாகாவில் உடமையாற்றுகிறார். 24 வயதான அங்காமி மலையேறும் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்தவர்.

இதற்கிடையில் முதலாவது பாரத மலையேறும் கோஷ்டியில் வெற்றிபெற்ற காப்டன் சீமாவும், நவாங்கொம்புவும் அடித்தளத்திற்கு வந்துவிட்டதாய்க் கூறப்படுகிறது.

அவர்களுக்கு அடுத்து இரண்டாவதாகச் சென்ற கியாட்ஸோ, வங்கியால் இருவரும் வந்துகொண்டிருக்கின்றனர்.

முதல் கோஷ்டியில் சென்ற சீமா தன் தாயார் அளித்த வெள்ளி நாணயங்களை உச்சியில் விட்டுவந்தார். நவாங் கொம்பு தனது மாமன் அளித்த புத்தரின் உருவச்சிலையையும் மற்றும் சில பொருட்களையும் உச்சியில் விட்டுவந்தார்.

கடைசிப் பாரத கோஷ்டியின் வெற்றியைக் காஷ்மீர், பீகார் முதன் மந்திரிகளும், அமெரிக்க ரஷ்ய மலையேறும் ஸ்தாபனங்களும் பாராட்டியிருக்கின்றன.

பாரத வெற்றி சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க ஒரு வெற்றியென ரஷ்ய மலையேறும் ஸ்தாபனம் பாராட்டுத் தெரிவித்திருக்கிறது.

நியுயோர்க் மலையேற்றகினப் அனுப்பியுள்ள பாராட்டுதலில் இந்தியக் கோஷ்டியின் மகத்தான வெற்றி காரணமாக அமெரிக்க மலையேறுகள் பெருமிதத்துடன் அவர்களுக்குத் தலைவணக்கம் செய்கிறார்களெனக் கூறியிருக்கிறது.

எவரெஸ்ட் சிகரத்தை இந்தியாவும், அமெரிக்காவும் தான் மும்முறை அடைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# பொலிவியா நாட்டில் உள்நாட்டு யுத்தமாம்

சாந்தாடொமிங்கோ மே 25

டொமினிக்கனில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டதை அடுத்து பொலிவியாவில் சிவில் யுத்தம் ஆரம்பமாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இப்போது டொமினிக்கனில் கருங்காலமைப் பிரதமர் ஒருவரின்கீழ் அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றிப் பேச்சு நடைபெறுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் பொலிவியாவில் தொழிற்சங்கத் தலைவர் நாடுகடத்தப்பட்டதின் எதிரொலியாகச் சிவில் யுத்தநிலை ஏற்பட்டுள்ளதென்றும் சுரங்கத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத் துருப்புகளுக்குமிடையே நடைபெற்ற கைகலப்பில் 6 பேர் மாண்டனரென்றும் கூறப்படுகிறது.

நகரச் சுரங்கங்களைக் கைப்பற்றுமாறு துருப்புகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# அமெரிக்க விமானங்கள் ஆஸ்பத்திரிகளை தாக்கினவாம்

## வடவியட்நாம் புகார்

சைகோன், மே 25

வடவியட்நாமில் 40க்கதிகமான அமெரிக்க விமானங்கள் நேற்று நாள் முழுதும் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தின. இதனால் பலத்த சேதம் விளைவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சைகோனிலிருந்து 560 கிலோமீட்டர் தூரத்தில் அமெரிக்க ஹெலிகோப்டர்களின் துணையுடன், அரசாங்கத் துருப்புகள் நடத்திய தாக்குதலில் 45 வியட்காங்கியர் கொல்லப்பட்டுப் 10 பேர் சிறைபிடிக்கப்பட்டனர். மற்றோரிடத்தில் 18 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்.

வியட்காங்கியர் நடத்திய ஒரு தாக்குதலில் 42 அரசாங்கத் துருப்புக்களுக்கு காயமேற்பட்டதென்றும், 24 பேரை காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க விமானங்கள் வடவியட்நாமில் ஆஸ்பத்திரிகளையும், பாடசாலைகளையும் தாக்குவதாயும் இதனால் 79 பேர் கொல்லப்பட்டதாயும் வடவியட்நாம் புகார் கூறியிருக்கிறது.

## துருப்புக்கள் குவிகின்றன

புதுடில்லி, மே 25

பாகிஸ்தானின் கிழக்கு எல்லையில் தொடர்ந்து துருப்புக்களைப் பெருக்கி வருவதாய் அறிவிக்கப்படுகிறது. மேற்கு பாகிஸ்தானிலிருந்து கிழக்கு பாகிஸ்தான் எல்லைக்கு தொடர்ந்து துருப்புக்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. இவைகளில் பெரும்பாலும் பீரங்கி துருப்புக்கள்.

அஸ்ஸாம் கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் லத்திதிலா-துமாபனி பகுதியில் பாகிஸ்தான் துருப்புக்கள் தொடர்ந்து சுட்டு வருகின்றன.

மேற்கு வங்க எல்லையில் புகுமுயன்ற பாகிஸ்தானியர் மீது சுட்டதில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

மற்றோரிடத்தில் அவர்கள் உட்புகுந்து கால்நடைகளைத் தூக்கிச் சென்று விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

திரிபுராவில் வெலோனு பகுதியில் 60 வயதுள்ள ஒருவரை பாகிஸ்தானியர் கடத்திச் சென்று விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## பாக்: எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

காரச்சி, மே 25

கல்கத்தாவில் பாகிஸ்தானிய தூதராலயத்தின் முன்பாக நடைபெற்ற பாகிஸ்தான் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஆட்சேபித்து ஆட்சேபக் குறிப்பு ஒன்று இந்திய அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டது. பாகிஸ்தானிய எதிர்ப்புக் கூட்டம் ஒன்றை நடத்த ஹிந்தி வகுப்புவாதிகள் ஒழுங்கு செய்திருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## காஷ்மீரில் சட்ட மறுப்பு?

கராச்சி, மே 25

பிரிட்டிஷாரை எதிர்த்து காங்கிரஸ் கட்சி மேற்கொண்ட சட்டமறுப்பு இயக்கத்தைப் போன்று, காஷ்மீர் சுயநிர்ணய உரிமைக்காக சட்டமறுப்பு இயக்கம் நடத்துவதென ஸ்ரீநகரில் மக்கள் செயல் கமிட்டி தீர்மானித்ததாய் பாகிஸ்தான் ரேடியோ கூறியது.

## ஜயப்பிரகாஷ் யோசனை

புதுடில்லி, மே. 25

நாடுகளின் எல்லைத் தகராறுகளில் பொதுக்காரிய தரிசி தலையிடும் வகையில் ஐ. நா. சாஸனம் திருத்தப்பட வேண்டும், என ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் யோசனை தெரிவித்திருக்கிறார். அவரது சமரச முயற்சி வெற்றிபெறாவிட்டால், உலக நீதிமன்றத்துக்கு பிரச்னையை அவர் சமர்ப்பிக்கக் கூடியவகையில் இத்திருத்தம் இருக்கவேண்டும் என அவர் கூறினார்.

## டாக்டர் ஹுஸெயின்

ரியாத், மே 25

இங்கு விஜயம் செய்திருக்கும் இந்திய உப ஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹுஸெய்னுக்கு பாரத தூதர் அளித்த விருந்தில் சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர், மந்திரிகள், உயர்தர சிவில், ராணுவத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். டாக்டர் ஹுஸெய்ன் இன்று மக்கா புறப்படுகிறார்.

## தாய்லந்து மறுப்பு

பங்காக், மே 25

வியட்நாம், லாவோஸ் மீது தாக்குதல் நடத்த தாய்லந்து அமெரிக்க விமானங்களுக்குத் தளம் அளித்திருப்பதாக ரஷ்யா கூறிய குற்றச்சாட்டை தாய்லந்து மறுத்திருக்கிறது. தாய்லந்து தன் சொந்தப் பாதுகாப்புக்காகவே அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்திருப்பதாக அது கூறியுள்ளது.

## பக்துனியர் மீது அடக்கு முறை

புதுடில்லி, மே 25

பக்தூன் இயக்கத்தை நசுக்கும் முயற்சியில் பாகிஸ்தான் இப்போது தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. பக்துனியர் கிராமங்கள் மீது பாகிஸ்தான் விமானங்கள் பீரங்கிகளால் தாக்கியதாயும், இதன் விளைவாக பல பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டதாகப் புகார் கூறப்படுகிறது.

# இன்னும் 2 ஆண்டுகளுக்கு தி. மு. க. கிளர்ச்சி இல்லை

## அண்ணாதுரை அறிவிப்பு

கோயமுத்தூர், மே 25

வருகிற பொதுத்தேர்தல்களை உத்தேசித்து இன்னும் 2 ஆண்டுகளுக்குக் கிளர்ச்சிகள் எதிலும் ஈடுபடுவதில்லையென திராவிட முன்னேற்றக் கழகம் முடிவுசெய்திருப்பதாய் திரு. ஸி. என். அண்ணாதுரை கூறினார்.

ஹிந்தியை இந்தியாவின் ஒரே ஆட்சிமொழியாக்கக் கூடாதென்ற தி. மு. க. கோட்பாட்டை அவர் வற்புறுத்திப் பேசினார். மொழிப்பிரச்னையை அவசர உணர்ச்சியுடன் தீர்க்கவேண்டுமென்றும் அவர் கூறினார்.

கட்சில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பினால் மொழிப்பிரச்னை பின்னுக்குப் போய்விட்டதென மந்திரி சத்யநாராயண் சிங்ஹா கூறியதைக் குறிப்பிட்டு "அதற்குமாறாக மொழிப் பிரச்னை அவசரமானதாகிவிட்டது. இதற்கு விரைவில் தீர்வுகாணவேண்டும். ஆக்கிரமிப்பாளருக்கெதிராக வலுவான பாதுகாப்பு நாட்டு மக்களின் மனநிறைவேயாகும். வெறும் படைபலம் மட்டுமல்ல" என்றார் அண்ணாதுரை.

சீன ஆக்கிரமிப்பின் ஆரம்ப காலத்தில் காலஞ்சென்ற நேரு, மொழிப்பிரச்னையில் ஹிந்தி மொழியினரல்லாத மக்களுக்கு அளித்த வாக்குறுதியை விரிவாகப் பிரசாரம் செய்வதைத் திரு அண்ணாதுரை வற்புறுத்திக் கூறினார்.

# ஹிந்திபேசாத ராஜ்யங்களுடன் ஆங்கிலத்தில் தொடர்பு

## விரும்பும் வரை நீடிக்க ஆதரவு

புதுடில்லி, மே 25

ஹிந்தி பேசாத ராஜ்யங்களின் சட்டசபைகள் அனைத்தும் ஒரு விசேஷ தீர்மானம் மூலம் ஆங்கில உபயோகத்தை நிறுத்துவதென்று ஒப்புக்கொள்ளும்வரை, யூனியன் அரசாங்கத்துக்கும் ஹிந்தி பேசாத ராஜ்யங்களுக்குமிடையே கடிதப்போக்குவரத்துக்கு ஆங்கிலம் தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு வரவேண்டுமென்னும் பொதுக்கருத்து ஏற்கனவே உருவாகியிருக்கிறது.

உயர்மட்டத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளின் விளைவாக இந்தக் கருத்து உருவாகியிருக்கிறது.

அகில இந்திய உத்தியோகப் பரீட்சைகளுக்கு ஆங்கிலமே தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு வரவேண்டுமென்றும் ஹிந்தியிலும் மற்றப் பிரதேச மொழிகளிலும் பரீட்சைகளை எழுத அனுமதிக்கும் விஷயம் பின்னர் கவனிக்கப்படுமென்றும் கருதப்படுகிறது.

பார்லிமெண்டில் அலுவலை நடத்துவது சம்பந்தமாக திரு. பாட்டீலின் யோசனை பின்பற்றப்படலாமாம். அதாவது பார்லிமெண்டில் ஆஜராகியிருக்கும் எம். பி.க்களில் 3ல் 2 பங்கு பேர் ஆதரித்தால் ஹிந்தியில் அலுவல்களை நடத்தலாம்.

சமீபத்தில் நடந்த ஹைக்கோர்ட் நீதிபதிகள் மகாநாடு விரும்பியபடி ஆங்கிலமே சுப்ரீம்கோர்ட், ஹைக்கோர்ட்டுகளில் கோர்ட் மொழியாகக் காலவரம்பின்றி நீடிக்கும் இப்போது அதை ஹிந்திக்கோ அல்லது பிராந்திய மொழிகளுக்கோ மாற்றும் பிரச்னையே இல்லை.

ஹிந்தி திணிக்கப்படுகிறதென்ற அச்சத்தைப் போக்க நடவடிக்கைகள் எடுக்கும் ரீதியிலேயே அரசாங்கத்தின் தற்போதைய சிந்தனையிருக்கின்றது. அதேசமயத்தில் ஹிந்தி பேசாத ராஜ்யங்களில் ஹிந்தியைப் பரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## டென்னிஸ் வீரர்கள் வேண்டுகோள்

லண்டன், மே 25

உலகின் தலைசிறந்த 35 டென்னிஸ் வீரர்கள் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய டென்னிஸ் வீரர்கள் லான் டென்னிஸ் போட்டியிலிருந்து வாபஸ்பெறக் கூடாது என வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

## இறந்தவர்கள்

கராச்சி, மே 23

பாகிஸ்தான் புயலில் செத்தவர்களின் எண்ணிக்கை 12,722 என அறிவிக்கப்பட்டதும் இது தவிர 920 பேரைக் காணவில்லையாம்.

## 22 பேர் மூழ்கினர்

புதுடில்லி, மே 25

உத்தரபிரதேசத்தில் ஏற்பட்ட படகு விபத்தினால் 22 பேர் மூழ்கிவிட்டனர் என அறிவிக்கப்பட்டது.

## 19 கோடி டாலர் அமெரிக்க கடன்

வாஷிங்டன், மே 25

இந்தியாவுக்கு 19 கோடி டாலர் அமெரிக்கா கடன் வழங்க விருக்கிறது.

## படகு விபத்தில் 150 பேர் பலி

லண்டன், மே 25

மலாவியில் ஏற்பட்ட படகு விபத்தொன்றில் 150 பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

## நேரு இல்லத்தில் எம். எஸ். கச்சேரி

புதுடில்லி, மே 25

நேருஜீ பிரதமராய் இருந்தபோது 16 ஆண்டுகளாக வசித்துவந்த 'தீன்மூர்த்தி' பவனில் அவரது முதலாவது சிரார்த்ததினமான நாளை மாலை 5-30 முதல் 6-30 வரை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இசைக்கச்சேரி நடைபெறும். பொது மக்கள் இலவசமாக அனுமதிக்கப்படுவார்கள். அகில இந்திய ரேடியோ இந்த நிகழ்ச்சியை அஞ்சல் செய்யும்.

மலேஷியாவில்

## அண்ணாதுரையை தடைசெய்க

சிங்கப்பூர், மே 25

திரு. அண்ணாதுரை மலேஷியா வருவதைத் தடைசெய்யுமாறு மலேஷிய மத்திய அரசாங்கத்தையும், சிங்கப்பூர் ராஜ்ய அரசாங்கத்தையும் வற்புறுத்தி மலேஷியா இந்தியர் காங்கிரசின் வாலிபர் பிரிவு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அண்ணாதுரை அடுத்த மாதம் மலேஷியா வருவார் என உதல பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளன.

## மந்திரிக்கு வரவேற்பு

சுழிபுரம், செவ்.

உள்ளூராட்சிமந்திரி திரு. எம். திருச்செல்வத்திற்கு ஒரு சிறந்த வரவேற்பு அளிப்பதென சுழிபுரம் கிராமசபை தீர்மானித்துள்ளது. இக்கூட்டம் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் எம். பி. க்கள்

# அரசாங்கத்தில் இருப்பதால் வாலிபர்களுக்கு வேலை கிடைத்துவிடாது

## கோப்பாய் எம். பி. பேச்சு

கோண்டாவில், செவ.

"இன்று பொருளாதார அபிவிருத்தி குன்றி நமது நாடு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது இப்படியான சூழ்நிலையில் தமிழ்மக்கள் மட்டும் தனிபாகவில்லாமல் சிங்களமக்களோடு தோளோடு தோள்சேர்ந்து நாட்டின் பற்பல பாகங்களிலும் தேசிய அபிவிருத்திச் சங்கங்களை ஆரம்பித்து அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்க ஆவன செய்ய வேண்டும். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது. நாம் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் எம்மூலம் உத்தியோகம் பெற்று விடலாம் என நினைப்பது புத்திசாலித்தனமானதல்ல. படித்த இளைஞர்கள் உத்தியோக மோகததைத் துறந்து நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்" இவ்வாறு கோப்பாய் பாராளமன்றப் பிரதிநிதி திரு.கதிரவேலுப்பிள்ளை இணுவில் தேசிய விவசாயிகள் கழகம் நடாத்திய தேசிய விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

வலிகாமம் வடக்கு காரியதிகாரி கி. முருகேசம்பிள்ளை பேசுகையில்; "யாழ்ப்பாணக் குடாநாட்டில ஜனத்தொகை அதிகரித்து விட்டது. ஆனால் பொருளாதாரம் குன்றி விட்டது. பண்டைக் காலத்தில் உணவுப் பொருட்களை வழங்கிய நிலங்கள் இன்று காடுகளாகிக் காட்சியளிக்கின்றன. மக்கள் உள்ளத்திலே தம் நிலங்களில் வீடுகள் கட்ட வேண்டுமென்ற உணர்ச்சி தோன்றுகின்றதே தவிர நாட்டின் பொருளாதார நிலை என்ன? உணவுப் பொருட்களின் உற்பத்தி இல்லையேயானால் வாழ்க்கையின் நிலை என்ன? என்ற உணர்ச்சிகள் தோன்றுவதாக தெரியவில்லை. இன்று அரசாங்கம் விவசாய உற்பத்திக்கு பல வழிகளில் ஊக்கமளிக்கின்றது. அப்படியிருந்தும் படித்த வாலிபர்கள் விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கு ஏன் தயங்கவேண்டும். விவசாயத்தை எவ்வாறு பெருக்கலாம் என்று கற்றறிந்தவர்கள் பாடசாலைகளில் விவசாயப் பயிற்சி ஆசிரியர்களாகக் கடமையாற்ற விரும்புகிறார்களேதவிர தாம் கற்ற அனுபவத்தை விவசாய உற்பத்தியில் செலுத்தத் தயங்குகிறார்கள். இப்படியான சூழ்நிலை மாற வேண்டும். இணுவில் கிராமத்தில் பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய செய்வதற்கு நல்ல சூழ்நிலை யுண்டு அச் சூழ்நிலையை இணுவில்கிராமவாசிகள் பயன்படுத்த தயங்குவதையிட்டு நான் மிகவும் கவலைப்படுகிறேன்.

மற்றும் திருவாளர்கள் புதுமைலோலன் மு.ஆலாலசுந்தரம் கே. அப்புத்துரை சா. வே பஞ்சாட்சரம் ஆகியோரும் பேசினர்கள்.

விழாவில் இன்னிசைக்கச்சேரி, நாடகம், விளையாட்டுப் போட்டிகள் ஆகியன இடம் பெற்றன.

---

## 'நான்கு பொறுப்பதிகாரிகளை நியமிக்குக'

### நீதி அமைச்சரிடம் எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

அரசகரும மொழித் திணைக்களம் இதுவரை சிங்களத்தில் வெளியிட்ட பாட நூல்களில் தமிழில் வெளியிடாத நூல்களின் பட்டியலைத் தமக்குத் தருமாறு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் நீதி அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

மேற்படி திணைக்களத்திலே மொழி பெயர்ப்புக்கும் நூலாக்கத்துக்கும் சிங்களப் பகுதியிலுள்ள கண் காணிப்பாதிகளின் விபரங்களையும் தமிழ்ப்பகுதியிலுள்ள விபரங்களையும் தனித்தனி கொடுக்குமாறும் திரு. இரத்தினம் அமைச்சரைக் கேட்டுள்ளார்.

சிங்களத்திலே செய்யப்படும் பணியைப் போலத் தமிழிலும் செய்தற்கு பொறியியல் மருத்துவம் பொருளாதாரம் சட்டம் எனும் நான்கு துறைகளுக்கும் பொறுப்பாக சிங்களப் பகுதியிலிருப்பது போலத் தமிழ்ப் பகுதியிலும் நான்கு மொழி பெயர்ப்புக் கண்காணிப்பாளர்களை நியமிக்குமாறும் திரு. இரத்தினம் நீதி அமைச்சரை வேண்டியுள்ளார்.

---

## ரூ. 3000 செலவில் அலங்காரப்பந்தல்

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சியில் நடாத்தப்படும் 13-வது திருக்குறள் மகாநாட்டிற்கு ஜெயந்திநகர் மைதானத்தில் 3000 ரூபாய் செலவில் பந்தல்போட கிளிநொச்சி நீர்ப்பாசன இன்சினியர் பொறுப்பேற்றுள்ளார் எனத் தெரியவருகின்றது. பந்தல் மிகவும் அலங்காரமாக அமையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### தமிழ்நாட்டு அறிஞர்கள்

கிளிநொச்சியில் வருகிற ஜூன் மாதம் 11, 12 13-ம் திகதிகளில் நடக்கவிருக்கும் 13-வது திருக்குறள் மகாநாட்டிற்கு தென் இந்தியாவிலிருந்து திரு ஞானசம்பந்தன், ஒளவை நடராஜன், ஒளவை துரைசுவாமிப்பிள்ளை ஆகியோர் முக்கிய பேச்சாளராகக் கலந்துகொள்வார்களெனத்தெரியவருகின்றது.

மற்றும் மலைநாட்டு எழுத்தாளர் திரு. ஏ. வி. பி. கோமஸ்லும் இன்னும் பல கலைஞர்களும் கலந்துகொள்வார்கள். மகாநாட்டில் அநேக நாடகம், ஆகிய நடனம் போட்டிகள் இடம்பெறும் மகாநாட்டின்ஏற்பாடுகள் மிகவும் துரிதமாக நடைபெறுகின்றது.

---

## பருத்தித்துறையில் நிவாரண உதவிவேலை

பருத்தித்துறை, செவ்

கடும் வரட்சியாலும் கடந்த சூறாவளியாலும் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதி விவசாயிகட்கும் மீனவர்கட்கும் புனர்வாழ்வழிக்கு முகமாக வழங்கப்படும் நிவாரண உதவி வேலைத் திட்டத்தின் இரண்டாவது அம்சமாக உவர் நீர்த்தடுப்பு அணைக்கட்டும் பணி மிகவிரைவில் ஆரம்பமாக விருக்கிறது.

அம்பன் கிராமத்தை அடுத்து ஆரம்பமாகவிருக்கும் இச்சகாய வேலைக்கான ஏற்பாடுகளைக் காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் செய்துவருகிறார்.

இந்த வேலையில் அம்பன், குடாரப்பு, நாகர்கோவில், குடத்தனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கதிகமான தொழிலாளர்கள் கலந்துகொள்வார்கள் என அறியப்படுகிறது.

இதில் கலந்து கொள்ளும் தொழிலாளர்கட்கு உலக உணவுக் கவுன்சிலின் திட்டத்தின் படி நாளொன்றுக்கு ஒருரூபா நாற்பது சதவீதம் ஊதியம் வழங்கப்படும்.


---


## அரசாங்க அதிபர் லீவில் சென்றுள்ளார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. தெவில் ஜெயவீர சென்றவாரம் தொடக்கம் மூன்றுவார லீவில் சென்றுள்ளார்.

தற்பொழுது உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. பெருமையினார் தற்காலிகமாக அர





## அகப்பொருளில் அன்பு

குரும்பசிட்டி, செவவாய்

"அகப்பொருள் இலக்கணங்களில் பாலைக்கு நிலம் கூறாமல் பூமியை குறிஞ்சி' முல்லை, மருதம, நெய்தல் என நானிலமாக வகுத்திருப்பதாலும் அகநானூற்றில் உள்ள 400 பாடல்களில் பாலைக்கு 200 பாடல்களும், கலித்தொகையில் பாலைக்கலி முதலாவதாக அமைந்திருப்பதும் அகப்பொருளில் பாலைக்கு ஒரு முதல்ஸ்தானத்தை அளிப்பதாக இருக்கிறது அகப்பொருளில் அன்பே பிரதானமான இடம் வகிப்பதால் அந்த அன்பு பிரிவு ஏற்படும்போதே மிகுதியாகக் காணப்படும். பிரிவே பாலையாதலால் அகப்பொருள் இலக்கியக்காரர் அன்பை விளக்குவதற்காகவே சங்க நூல்களில் பாலைக்கு முதன்மை தந்தனர் என்று கூறுதல் பொருந்துமா என்பதைத் தமிழறிஞர்கள் ஆராய்தல் வேண்டும். திருவாசகத்தில் மணிவாசகரை இறைவன் "இரு" எனச்சொல்லிப் பிரிந்த காலத்தில் அவர் பாடிய பாடல்களே அன்பின் பெருக்கின் உச்சத்தைக் காட்டுவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்".

மல்லாகம் ஆங்கிலபாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பண்டித மாணவர் கழக ஆண்டு விழாவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் வ. நடராஜன் "அகப் பொருளிற் பாலை" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விழாவிற்குத் திரு. இரா. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி இவ்விழாவில் "கம்பராமாயணத்தில் உலகியல்" என்ற தலைப்பில் பேசினார்.

---

## விசேஷபூசையும் பிரார்த்தனையும

கிளிநொச்சி, செவ்வாய்

ஜெயந்திநகர் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தில வெள்ளிக்கிழமை தோறும் விசேஷ பூசையும் பிரார்த்தனையும நடைபெற்று வருகின்றது.

இங்குள்ள சைவமக்கள் மிகவும் ஆவலுடன் இப்பூசைகளிலும் பிரார்த்தனைகளிலும் ஈடுபட்டு சமையவளர்ச்சிக்காகவும் இறைவழிபாட்டிற்காகவும் பெரிதும் தொண்டாற்றி வருகின்றனர். இக்கிராம மக்கள் இவ்வாலயத்தை கட்டிடமாக கட்டிமுடிபபதற்கு முயற்சிசெய்து வருகிறார்கள்.

---

## எதிரி விடுதலை

காங்கேசன்துறை, செவ்.

ஜயன்ஸ் என்பவரை வாளினால் மோசத் மரணம் விளைவித்ததாக நீர்வேலியைச் சேர்ந்த பீ. சுப்பையா என்பவருக்கெதிராக தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறைமாஜிஸ்டிரேட் திரு. டி. பேராஸ் சில்வா முன்னிலையில விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணையின் பின்னர் எதிரி குற்றவாளியல்ல எனத் தீர்மானிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

எதிரிதரப்பில் திரு. கே. வி. என். சண்முகநாதன் திரு செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானார்.

[illegible] கவனித்து வருகிறார்.

---

## வங்கிஊழியர் சங்கத்தின் உதவி

இலங்கையிலுள்ள வங்கி ஊழியர்கள் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் விசேஷ பொதுக்கூட்டம் சமீபத்தில் நடைபெற்றபோது காலஞ்சென்ற சங்க அங்கத்தவர்கள் இருவரின் குடும்பத்தினருக்கு சங்கத்தின் மரண சகாயப்பணம் வழங்கப்பட்டது. காலஞ்சென்ற திரு குமாரசாமியின் தந்தையார் திரு. எஸ்; கணபதிப்பிள்ளையும் சகோதரி செல்வி புனிதவதியும் பணம் பெறுவதை ஒரு படத்திலும் காலஞ்சென்ற திரு. கே. பொன்னையாவின் மனைவி திருமதி செல்லம்மா பணம் பெறுவதை மற்றப்படத்திலும் காணலாம், சங்கத்தின் கடந்த வருடத் தலைவர் திரு. டபிள்யு. எஸ். எம். ஸ்பென்சர் பணத்துக்குரிய காசோலையை வழங்குவதையும் அவருக்கு அருகில் சங்கத்தின் புதிய தலைவர் திரு. ஏ. சோமசுந்தர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

இலங்கைவங்கி நுவரெலியாக் கிளையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. கே. குமாரசாமியின் தந்தையிடம் 3,042 ரூபா 50 சதத்துக்குரிய காசோலையும் திரு. குமாரசாமியின் சகோதரி செல்வி புனிதவதியிடம் 2,500 ரூபாய்க்குரிய காசோலையும் வழங்கப்பட்டன. இலங்கை மெர்க்கண்டைல் வங்கிக் காலிக்கிளையில் கடமையாற்றிக் காலமான திரு. பொன்னையாவின் மனைவி திருமதி செல்லம்மா பொன்னையாவிடம்5,525 ரூபாய் 50 சதத்துக்கான காசோலையும் வழங்கப்பட்டது.

---

## தாய்ச்சங்கத்தின் அரசியல் சேர்க்கை குறித்து பலத்த கண்டனம்

### அ. லி. சே. சங்க மன்னார்க்கிளை நிறைவேற்றியது

திருக்கேதீஸ்வரம், செவ்.

அரசாங்க சேவை லிகிதர் சங்க மன்னார்க் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது தாய்ச்சங்கத்தினர் ஒரு சில அரசியல் கட்சிகளுடன் சேர்ந்துகொள்ளப் போவதற்கான அறிகுறிகள் தென்படுவது குறித்து வன்மையான கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தியாகி கந்தசாமி தினத்தை ஜூன் மாதம் 5-ந் திகதி கொண்டாடுவதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

தாய்ச்சங்கம் சில குறிப்பிட்ட அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து நடந்துகொள்வதாகவும், இவர்கள் தாமாகவே அரசியல் கட்சிகளுடன் இணைந்துவிடக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாகவும் இது கண்டனத்துக்குரியதெனவும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்க சேவை லிகிதர் சங்கத்தின் நன்மை கருதி அரசியல் கட்சிகளுடன் தொடர்புகொள்ளப்படவில்லை என்பதை குறிப்பிட்டுக்காட்டும் தீர்மானம், இனிமேல் அரசியல் கட்சிகளுடன் இணையக்கூடிய வகையில நடந்துகொள்ளக் கூடாதெனவும், அங்கத்தவர்கள் அனைவருக்கும் நன்மை பயக்கக்கூடியதாக சுயேச்சையான பாதையில் அரசியல் கலப்பற்ற தொழிற்சங்கமாக இயங்கவேண்டும் எனவும் தாய்ச்சங்க நிர்வாகத்தைக் கோரியுள்ளது.

மன்னார்க் கிளையின் புது வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: வி. ஏ. பொன்னையா, உபதலைவர்கள்: திருவாளர்கள் எம். பாலராஜா, எம். எம். செனிவிரத்ன, காரியதரிசி: திரு. எஸ். பெரியதம்பி, உதவிக்காரியதரிசி: திரு. கே. முத்துலிங்கம், தனாதிகாரி: திரு. கே. இரத்தினவேல்.

5 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## தலைமன்னார் - மண்டபம் கப்பல்சேவை மீண்டும் விரைவில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், புதன்

தலைமன்னார் - மண்டபம் கப்பல் சேவை மீண்டும் விரைவில் ஆரம்பமாகும் என நம்பப்படுகிறது.

தற்பொழுது புதிதாகப் பதவியேற்றுள்ள இந்தியத் தூதர் திரு பீம் சென் சச்சாரை யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை இந்தியர் சங்கத்தின் பிரதிநிதிகள் சென்ற வெள்ளிக்கிழமையன்று சந்தித்து மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

அந்த மகஜரில் சென்ற வருட இறுதியில் ஏற்பட்ட புயல்காரணமாக தடைப்பட்ட தலைமன்னார்-தனுஷ்கோடி கப்பல் சேவையை நடத்தும்படியும், கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை பெரும் பான்மையோருக்கு வசதியளிக்காது என்றும், இதனால் ஏற்படும் வீண் சிரமங்கள் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

தலைமன்னாருக்கும் மண்டபத்திற்குமிடையில் கூடிய விரைவில் கப்பல் சேவை வழக்கம போல் நடைபெறுமென்றும் இதுபற்றி தற்போது இந்திய அரசாங்கத்திடம் மேலும் தொடர்பு கொண்டுள்ளதாகவும் இந்தியத்தூதர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மகஜரில் உள்ள மற்றும் விஷயங்கள் குறித்து அதற்குரிய ஏற்பாடுகளை செய்வதாகவும் பாஸ்போர்ட் விசாரணைக்காக அதற்குரிய அதிகாரியை யாழ்ப்பாணம் இலங்கை இந்தியர் சங்கத்திற்கு விரைவில் அனுப்பிவைப்பதாகவும் கூறியுள்ளார்.

---

## வெள்ளத்தினால் அதிக சேதம்

கொழும்பு, செவ்

மலைநாட்டில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்தனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிர்கள் சேதமடைந்தன.

ஹன்வெலவிலுள்ள பாதைகள் வெள்ளத்தில் மூழ்கி விட்டன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள அரசாங்க அதிபர்களுக்கு விபரங்களை உடனடியாக அறிவிக்குமாறு சமூகசேவை உதவி டைரக்டர் டாக்டர். ஆர். எஸ். திருச்செல்வம் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேலும் 23 ஆசிரியர்கள் தற்காலிக வேலை நீக்கம்

கொழும்பு, திங்கள்

கடந்த பொதுத் தேர்தலில் அரசியலில் பங்குபற்றியதற்காக இன்று மேலும் இருபத்தி மூன்று ஆசிரியர்கள் வித்தியாதிபதியால் பதவியிலிருந்து தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இத்துடன் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தொகை நாற்பத்தியொன்றாகிறது. அரசியலில் பங்குபற்றியதன் காரணமாக எண்ணூறு ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# ரூ. 6,000 பெறுமதி மீன்பிடி படகு கைப்பற்றப்பட்டது

மாவிட்டபுரம், திங்கள்

கேட்பாரற்றுக்கிடந்த சுமார் ரூபா 6,000 பெறுமதியான மீன்பிடிப் படகையும், ரூபா 1000 பெறுமதியான மீன்பிடி வலைகளையும் மாதகல் இராணுவத்தினர் மாதகல் இராணுவ முகாமுக்கருகாமையில் கைப்பற்றினர்.

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக சுமார் 80 கள்ளக்குடியேற்றக்காரர்கள் மாதகல் கரையில் வந்திறங்கியதாகவும், இவர்களை மூன்று நபர்கள் கூட்டிச் சென்று மறைத்துவிட்டுத் திரும்பி வருகையில் கள சந்தேகம் கொண்டு இராணுவத்தினருக்குத் தகவல் கொடுத்ததாகவும், இராணுவத்தினர் இவர்கள் மூவரையும் கைதுசெய்யச் சென்ற சமயம் இந்த மூவரும் ஓடி மறைந்துவிட்டதாகவும் இது பற்றிக்கூறப்படுகிறது. கைப்பற்றப்பட்ட படகும் வலைகளும் இந்தியாவைச் சேர்ந்தவையாக இருக்குமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பந்தமாக காங்கேசன்துறை சட்டவிரோதக்குடியேற்றப் பகுதி பொலிசாருக்கு மாதகல் இராணுவத்தினர் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள [illegible] பொலிஸ் [illegible] குடியேற்றக்காரர்களைப் பற்றி அறிவித்தவர் [illegible] ஒருவரையும், [illegible] பொலிசார் நெல்லியடியில் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

'காங்கேசன்துறை

# குடியிருக்கும் மக்களை வெளியேற்ற வேண்டாம்'

## மந்திரிக்கு எஸ். ஜே. வி. கோரிக்கை

கொழும்பு, திங்கள்

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்குச் சொந்தமானதும் தற்போது தொழிற்சாலைக்குத் தேவையில்லாததுமான காணியில் வசித்துவரும் மக்களை அக்காணியிலிருந்து வெளியேற்றவிடாதவண்ணம் தமக்கு உறுதி தெரிவிக்குமாறு காங்கேசன்துறை எம். பி.யும் தமிழரசுக்கட்சித் தலைவருமான திரு எஸ் ஜே வி செல்வநாயகம் காணி மந்திரி திரு சி பி டி சில்வாவிடம் கோரியுள்ளார்.

மேற்படி காணிகளிலிருந்து இந்த மக்களை வெளியேற்ற தொழிற்சாலை அதிகாரிகள் உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்து திரு எஸ் ஜே வி தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"கீரிமலைக்குத் தெற்கும் பக்கத்திலுள்ள பாறைகள் அகற்றப்பட்டால் கீரிமலைக்கேணி வற்றக்கூடிய நிலை ஏற்படும்"

திரு எஸ் ஜே வி கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள மற்றொரு கடிதத்திலும் இதுபற்றிக் குறிப்பிட்டு குடியிருக்கும் மக்களை அவதிக்குள்ளாக்கவேண்டாமெனக் கேட்டுள்ளார்.

# களனி ஆற்றின் நீர்மட்டம் விரைவாக உயர்கிறது

கொழும்பு, திங்கள்

களனி ஆற்றின் நீர்மட்டம் மிக விரைவாக உயர்ந்தபடியே இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற இரவுக்கும் இன்று காலைக்குமிடையில் ஐந்தங்குலம் உயர்ந்துள்ளதாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை ஹட்டனில் பெய்த மழை 1. 1/8 அங்குலமென ஹட்டனில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இம் மழையினால் ஹட்டன்—நாவலப்பிட்டி ரயில் பாதை பாதிக்கப்பட்டுள்ளது. மழையினால் ஏற்பட்ட மண்சரிவே இதற்குக் காரணம்.

வாரியபொல, எட்டியாந்தோட்டை, இரத்தினபுரி, கிவித்தலை, கிரில ஆகிய இடங்களே இம் மழையினால் அதிகம் பாதிக்கப்பட்ட இடங்களாகும்.

இம் மழையினால் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களைத் தமது இலாக்காவுக்கு அறிவிக்கும்படியும், அவர்களுக்கு நிவாரணஉதவி அளிக்கப்படுமென்றும் அரசாங்க அதிபர்களைச் சமூகசேவைப் பகுதி பதில் டைரக்டர் டாக்டர் ஆர். எல். திருச்செல்வம் கேட்டுள்ளார்.

## கடத்தல்பொருள்கள் விற்கப்பட்டன

மாவிட்டபுரம், திங்கள்

அண்மையில் யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலும் கைப்பற்றப்பட்ட கள்ளக்கடத்தல் பொருட்கள் சென்றவாரம் யாழ்ப்பாணம் சுங்கப்பகுதியினரால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டன.

பாக்குமூடைகள், கராம்பு மூடைகள், ஹார்லிக்ஸ், ரேடியோ ஆகிய பொருட்கள் 10,000 ரூபாய்க்கு விற்கப்பட்டன. யாழ்ப்பாணம் சுங்கப்பகுதியைச்சேர்ந்த திரு. ரி. பவளராசா இவ் ஏலவிற்பனையை திறம்பட நடத்தினர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்

## 2-ம் சதிவழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, திங்கள்

பிரதிவாதிகளின் சார்பில் பிரதிவாதிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் சமர்ப்பித்த கோரிக்கைகளை ஏற்று ஜூன் மாதம் முதலாம் திகதிவரை இரண்டாம் சதிவழக்குவிசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. டேனியல் ஜோ, ஏச். வி. டி. அல்விஸ், ரெஜி விஜயசிங்கவும் இந்த வழக்கில் பிரதிவாதிகளாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

'பிளக்ஸ்ரல்' தெருவில் உள்ள கப்ட் கோர்ட்டில் இவ்வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1692-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ந் திகதி கொழும்பு, களுத்துறை, அம்பலாங்கொடை, காலி, மாத்தறை ஆகிய இடங்களிலும் வேறு இடங்களிலும் வேறு நபர்களின் உதவியுடன் சதி முயற்சிமூலம் சட்டரீதியற்ற முறையில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அரசாங்கத்தைக்கவிழ்க்க திட்டம் தயாரித்ததாக இவர்கள்மேல் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நீதியரசர்கள் ஜி. பி. ஏ. சில்வாவும், வி. மாணிக்கவாசகரும், ஏ. வி. அனெஸ்லியும் இந்த வழக்கை விசாரணை செய்கிறார்கள்.

பிரதிவாதிகள் இருவருக்கும் சட்டபூர்வமாக முன்னறிவித்தலோ, கட்டளையோ கொடுக்கப்படவில்லையென்று பிரதிவாதிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் ஜி. ஈ. சிட்டி கோர்ட்டில் தெரிவித்தார்.

## நோயாளர் அவதி

காங்கேசன்துறை, திங்

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர்கள் சிகிச்சைபெறுவதற்கு மிகவும் கஷ்டப்படுவதாக அறியப்படுகிறது. காலைமுதல் மாலைவரை இந்தநோயாளர்கள் ஆஸ்பத்திரியில் காத்திருக்கவேண்டியநிலை ஏற்படுகிறது. இந்த ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் அப்போதிக்கரிமார் வேறு இடங்களுக்கு நிலையில் மாற்றப்படுவதன் காரணத்தினாலேயே இவ்வித நிலை ஏற்படுவதாகத்தெரிகிறது

## கண்டெடுக்கப்பட்ட கூப்பன்கள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணப்பகுதி 24-ம் இலக்க கிராமசேவகர் பிரிவிலுள்ள ஏ. ஆர், பிரான்சிஸ்பிள்ளை, எவ். ஜோர்தம்பாள் ஆகியோரின் கூப்பன் புத்தகங்கள் பெரியகடையில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூப்பன்புத்தகத்துக்கு உரியவர்கள் தக்க ஆதாரங்களுடன் காட்டி அவற்றைப்பெற்றுக்கொள்ளலாம்

# விரிந்த அடிப்படையில்சைவப்பணி

## ஆத்மஜோதி நிலையத்தின் புதியதிட்டங்கள்

நாவலப்பிட்டி, செவ்வாய்

நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தின் சமயப் பணியை விரிந்த அடிப்படையில் செய்வதற்கு பல புதியதும் உருப்படியானதுமான திட்டங்களை மலையக தமிழ் மக்கள் வகுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த இருபது ஆண்டுகளாக சமயப் பணியில் நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினர் சேவை செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. சமய ஒழுக்கங்களை மக்கள் அனுஷ்டிக்காமையினால் மக்களிடையே மனிதப்பண்பாடு குறைந்து ஆலய வழிபாடும் தற்பொழுது குறைந்து வருவதாக சமய அறிஞர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இக்குறைகளை நிவிர்த்தி செய்து மலைய மக்களிடையே சமயப் பிரசாரம் மூலமும் சமய அனுஷ்டானம் மூலமும் புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஆத்மஜோதி நிலையத்தினர் சமயப்பிரசாரத்திற்கென வாகனம் ஒன்று ஏற்படுத்தி ஒலிபெருக்கி மூலம் சமயப்பிரசாரம் செய்வதென்றும், கூட்டுவழிபாடுகள் ஏற்படுத்தி வழிபாட்டு முறையை வளர்ச் செய்வதென்றும், இலவசத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் சமயக் கல்வியை மக்களுக்கு ஊட்டுவதென்றும், குறைந்த விலையில் சமய நூல்களை வெளியிடுவதென்றும் சைவப்பெரியார்களை அழைத்துப் பிரசாரம் செய்வதென்றும், ஞாயிறு சமய வகுப்புக்கள் நடாத்துவதென்றும் சமய பாட பரீட்சைகள், பேச்சுப் போட்டிகள், திருமுறைஓதல் போட்டிகள் முதலியன நடத்துவதென்றும் தீர்மானித்துள்ளனர்.

இத்திட்டங்களை முதலில் நடைமுறைக்கு கொண்டுவருவதற்காக பாராளுமன்ற நியமன அங்கத்தவர் திரு. எஸ். தொண்டமான் 1000 ரூபா நன்கொடையாக வழங்கியுள்ளார்.

## 'இசைமலர்' வெளியிடப்படும்

யாழ்ப்பாணம் புதன்

இசைவளர்ச்சியுறவும், கல்லூரிகளில் இசைப்பாடப் புத்தகங்களில்லாக் குறையைப் போக்கவும், இசையாசிரியர்களிடையே இசையார்வத்தை உண்டாக்கவும், இசைமாணவர்க்கு உபயோகமாகவும் "இசைமலர்" என்னும் பத்திரிகையை கல்லூரிகளது தவணை ஆரம்பத்தின்போது வெளியிடுவதாக இசையாசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## ஜி. ஸி. ஈ. பரீட்சையில்... சித்தியடையாததற்குக் காரணங்கள்

வெள்ளவத்தை, செவ்

கடந்த டிசம்பரில் நடைபெற்ற பரீட்சையில் அதிகப்படியான மாணவர்கள் சித்தியடையாததற்கு, கொழும்பு உயர்நிலைப் பள்ளிகளின் அதிபர்கள் இருவித காரணங்களைக் காட்டியுள்ளனர்.

அவை: மாணவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே கல்வி போகாமற் சித்தியெய்தி வந்ததும், அவர்களின் பெற்றோர்கள் விருப்பமற்ற நிலையிலும் மாணவர்களை விஞ்ஞானப் பாடங்களைப் படிக்கும்படி வற்புறுத்தியதுமாகும்.

கடந்தவாரம் வெளியான ஜி. ஸி. ஈ பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கும்பொழுது, 25 தொடக்கம் 30 சத விகிதத்தினரே சித்தியடைந்ததுடன், மேற்படிப்புக்கும் தகைமை பெற்றிருக்கின்றனர்.

கல்விப் பாடங்களைப் பரீட்சைக்கு எடுத்த பரீட்சார்த்திகள், விஞ்ஞானப் பாடங்களைப் படித்தெடுத்தவர்களிலும் பார்க்க அதிவிசேடமாக விளங்கள் எழுதியுள்ளார்கள்.

சித்தியடையாதவர்களில் குறிப்பிட்ட தொகையினர் ஒரு முறைக்குமேல் பரீட்சைக்குத் தோற்றியவர்களாகும். இத்தகைய மாணவர்களை தொடர்ந்து பள்ளிக்கூடங்களில் படிக்க இனிமேல் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அதிபர்களின் கருத்துப்படி மிகக்குறைந்த தொகையினரே தகுதியுடைய பரீட்சார்த்திகளாகக் காணப்படுகின்றனர் எனத் தெரிகிறது.

அதிபர்களின் சங்கம் ஜி. ஸி. ஈ. (சாதாரணப்) பரீட்சையை மாற்றி அமைக்கும்படி கல்விப் பகுதியைக் கேட்டிருந்தும், அதுபற்றி எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

## இராணுவத்தினரால் தாக்கப்பட்டவர்களை எம். பி. சந்தித்தார்

யாழ்ப்பாணம் புதன்

இம்மாதம் 18ம் திகதி செம்மண்குண்டு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் தாக்கப்பட்ட மண்டைதீவுக்கடற் றொழிலாளர்களை ஊர்காவற்துறைபாராளுமன்ற உறுப்பினர் திரு வ. நவரத்தினம் நேற்றுக் காலை நேரிற் சந்தித்து, அவர்களது முறைப்பாடுகளைக் கேட்டு, துயரமுற்றோரை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்ததோடு இவ்விடயம் பற்றி பிரதம மந்திரிக்கும், கடற்றொழில் மந்திரிக்கும் தந்தி மூலம் அறிவித்துள்ளார். தொழிலாளர்கள் இனிமேல் எவ்வித அச்சமுமின்றி அவ்விடங்களுக்குத் தொழில்செய்யச் செல்லலாமென்றும், மீண்டும் இவ்வித அசம்பாவிதமான சம்பவங்கள் நடைபெறாதிருக்கத் தாம் பார்த்துக்கொள்வதாகவும் வாக்குறுதி அளித்தார்.

## காசநோயைத் தடுக்க நடவடிக்கை

கொழும்பு, செவ்

காசநோயைத்தடுப்பது சம்பந்தமான வழிகளைக் கையாள சுகாதார இலாகா நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளது. கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு இந்நோய் பற்றி விபரமாக தெரிவிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

காசநோயால் பீடிக்கப்பட்டவர் வெளியில் சொல்வதற்கு வெட்கப் படுகிறார்களென்றும், ஆரம்பத்தில் இந்நோயை மிகவும் விரைவில் சுகப்படுத்தமுடியுமென்றும், சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. பி. ஞானவத்தனர்,

# 3,600 பாடசாலைகளில் பிரதான உபகரணங்களில்லை

கொழும்பு, திங்கள்

3,600 அரசாங்க பாடசாலைகளில் பிரதானமான உபகரணங்கள் இல்லையென கல்விப் பகுதி பரிசோதகர்கள் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கரும்பலகைகள், மேசைகள், கதிரைகள் போன்ற உபகரணங்களே இவைகள் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

128 மாவட்டங்களைச் சேர்ந்த கல்விப்பரிசோதகர்களின் அறிக்கைகளின்படி சராசரி ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள முப்பது பாடசாலைகளில் பிரதானமான பாடசாலைகளுக்கு அவசியம் தேவையான உபகரணங்கள் கிடையாதெனச் சொல்லப்பட்டுள்ளது.

இக்குறையை நிவர்த்தி செய்வதற்காக கல்விப்பகுதி [illegible] ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த உதவி டைரக்டர்களின் மகாநாடொன்றை வருகிற சனிக்கிழமை நடத்தவிருப்பதாக கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர் ஏ. இரியகொல்ல தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலுக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் நூற்றுக்கணக்கான பாடசாலைகள் தேவையான உபகரணங்கள் இல்லாமலேயே உயர்தரப் பிரிவுக்கு உயர்த்தப்பட்டதென்றும் ஆனாலும் அவைகளின் தரத்தைக் குறைப்பதற்கான சூழ்நிலை இல்லையென்றும் தேவையான முக்கியமான உபகரணங்கள் பாடசாலைகளுக்கு உடனடியாக வழங்கப்படுமென்றும் ஆசிரியர்களுக்கு வீட்டுவசதி கொடுக்கப்படுமென்றும் மந்திரி மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1955-ம் ஆண்டு மே மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org